சென்ற ஆண்டு ஏற்பட்ட பெருமழையின் காரணமாக அது போய் விட்டது. இன்னும் கரையமைப்பதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டிய நிலங்கள் இருப்பதால் இடையூறாக இருக்கிறது. துரிதமாக ஆர்ஜிதத்தை மேற்கொண்டு அந்தக் கரை அமைக்கும் பணியை விரைந்து மேற்கொள்ள அரசு ஆவன செய்ய முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இப்போது 9.3 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் உள்ள எல்லா வேலைகளும் 'ஸ்பெஷல் ஸ்கீம்' என்ற தலைப்பின்கீழ் எடுக்கப்படும். மேற்பார்வைப் பொறியாளர் தலைமையின்கீழ் பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

தென்னை தீவிர சாகுபடித் திட்டம்

*** 760. வினா—திரு. என். கிட்டப்பா** : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் தேங்காய் உற்பத்தியை அதிகரிக்க அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தமிழ்நாட்டில் தேங்காய் உற்பத்தியை அதிகரிக்க கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன :—

1. ஒருங்கிணைந்த தென்னை நாற்றங்கால் திட்டம்.
2. தென்னை உற்பத்தி திட்டம்.
3. தென்னை தீவிர சாகுபடித் திட்டம்.
4. நீண்டகால கடன் முறையில் புதிய தென்னந்தோப்புக்கள் அமைத்தல்.
5. தென்னை தோப்பில் முன்னோடி செயல் விளக்க பாத்திகள் அமைக்கும் திட்டம்.
6. நீண்ட குட்டையாக ஒட்டுத் தென்னங் கன்றுகள் விநியோகிக்கும் திட்டம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தேங்காய் உற்பத்தி பெருகும் வகையில், நாட்டுப் பாதுகாப்புக்கு வீட்டுக்கு ஒரு பிள்ளை தேவை என்பது போல், ஒவ்வொரு வீட்டிலும் ஒரு தென்னம்பிள்ளை வளர்க்க அரசு திட்டம் வகுத்து வழிவகை செய்யுமா ?

1972 மார்ச் 28]

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : 1,96,000 ஏக்கரில் இந்த உற்பத்தித் திட்டம் செயல்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட **46.44 கோடி தேங்காய்கள் கிடைக்கின்ற அளவில் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கிறது.**

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இந்த நெட்டை ரகம், குட்டைரகம் ஆகிய இரண்டையும் ஒன்று சேர்க்கக் கூடிய வேலை வேப்பங்குளம் பண்ணையில் செய்யப்படுகிறது. அதை இன்னும் வேறு இடத்தில் செய்வதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : ஒரு இடத்தில் செய்யும் திட்டம் இருக்கிறது. மேலும் செய்வதற்கான திட்டம் **யோசிக்கப்படும்.**

** 761. வினா—திரு. எம். முத்தையா : மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாக்களுக்கு* **விடையளிப்பாரா—**

(அ) தென்னை வளர்ப்புக்காக இவ்வாண்டில் நிதி ஒதுக்கப் பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், எவ்வளவு ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) நடப்பு நிதியாண்டில் தென்னை வளர்ப்புக்காக ரூபாய் 26,27,500 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாயூரம்—வைதீஸ்வரன் கோயில் நகரப் பேருந்து.

*** 762. வினா. திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு போக்கு** வரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொது மக்களின் கோரிக்கைப்படி மாயூரத்திற்கும் வைத்தீஸ்வரன் கோயிலுக்கும் இடையே பட்டவர்த்தி வழியாக நகரப் பேருந்து ஒன்று விட தஞ்சைப் பிரதேச போக்குவரத்து **அதிகாரி அவர்களால் ஒரு வழித்தடம் அனுமதிக்கப்பட்டது உண்மையா ?**

(இ) ஆம் எனில், அது பின்னர் ஏன் ரத்து செய்யப்பட்டது ?